# 5 சமய விழுமியங்கள்

மனித வாழ்வை மேம்படுத்தக் கடைப்பிடிக்கப்படும் பெறுமதிமிக்க வாழ்க்கைப் பண்புகள் விழுமியங்கள் எனப்படும். அவற்றுள் சமயம் சார்ந்த மனிதப் பண்புகள் சமய விழுமியங்கள் ஆகும். அத்தகைய பண்புகளுள் சிலவற்றைச் சுருக்கமாக நோக்குவோம்.

## (அ) உண்மை பேசுவோம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதிய நூல்களில் பாலபாடமும் ஒன்றாகும். அவரது இரண்டாம் பாலபாடத்தில் 'மெய்ம்மை' என்னும் கதை உள்ளது. அக்கதை சமய விழுமியப் பண்புகளில் ஒன்றான உண்மை பேசுதலின் சிறப்பினைப் பற்றி விளக்குகின்றது. அக்கதையினை 'உண்மை பேசுவோம்' என்ற தலைப்பின் கீழ் படிப்போம்; நாமும் உண்மையைப் பேசுவோம்; நன்மையைப் பெறுவோம்.

ஒரு நாள் விடியற்காலையில் முருகன், கிருஷ்ணன் என்னும் பெயர்களை உடைய இரண்டு சிறுவர்கள் ஒரு சந்தைக்குப் போய், தங்களுடைய சிறிய கடைகளில் தாங்கள் கொண்டுபோன பொருள்களைப் பரப்பிவைத்து, விற்பதற்காக உட்கார்ந்தார்கள். ஒரு கடையில் பழங்களும் காய்கறிகளும், மற்றொன்றில் தேங்காயும் வைக்கப்பட்டிருந்தன. சந்தை கலைந்தது. இந்தச் சிறுவர்களிடமும் பல பேர் பொருள்கள் வாங்கிக் கொண்டு போனார்கள்.

முருகனுடைய கடையில் எல்லாம் விற்றுக் கடைசியாய் ஒரு முலாம்பழம் மாத்திரம் இருந்தது, ஒரு பெரியமனிதர் வந்து, கையை அந்த முலாம்பழத்தின் மேல் வைத்து. ''எவ்வளவு பெரிய முலாம்பழம்! இதற்கு என்ன விலை? என்று கேட்டார்.

''இந்த முலாம்பழம் ஒன்றுதான் என்னிடத்தில் மிகுந்தது; இது நல்ல பழம்போல் தோன்றினாலும் இதில் கொஞ்சம் பழுது இருக்கின்றது ஐயா'' என்று சொல்லி, சிறுவன் அந்தப் பழத்தை மறுபுறம் திருப்பிக் காட்டினான். ''ஆமாம்! பழுது இருக்கின்றது! எனக்கு அது வேண்டாம்'' என்று சொல்லி, அந்தப் பெரியமனிதர் அந்தச் சிறுவனுடைய அழகிய வஞ்சகமில்லாத முகத்தைப் பார்த்து. ''உன்னுடைய பழத்திலுள்ள பழுதை வாங்க வருபவர்களுக்குக் காட்டுவது, விற்க வந்த உனக்கு ஆகுமா? என்று கேட்டார்.

''பொய் சொல்வதைப் பார்க்கிலும் இது நல்லது. ஐயா'' என்று அந்தச் சிறுவன் பணிவுடன் சொன்னான் ''நீ சொன்னது சரி, தம்பீ, ஒருபோதும் அதை மறவாதே; நான் உன்னுடைய கடையை இனி மறவேன்'' என்று சொல்லி அந்தப் பெரியமனிதர் கிருஷ்ணன் கடைப்பக்கம் திரும்பி, ''இது என்ன நல்ல பழத்தேங்காயா?'' என்று கேட்டார். ''ஆம், ஐயா, நல்ல பழக்காய். நேற்றுத்தான் பிடுங்கினது. நான்தான் உரித்தேன்'' என்று கிருஷ்ணன் மறுமொழி சொன்னான். அந்தப் பெரியமனிதர் அதை வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் போனார்.

''முருகா, நீ பெரிய மூடன்; முலாம் பழத்திலுள்ள பழுதை அந்த மனிதருக்குக் காட்டுகிறதா! நீ சொன்ன உண்மைக்காக அந்தப் பழத்தை இனி வீட்டுக்குக் கொண்டு போ, அல்லது எங்கேயாவது எறிந்துவிடு. அந்த முட்டுக்காயை வாங்கிக் கொண்டு போகின்றாரே, அவர் அதைப் பற்றி என்ன அறிந்துவிட்டார்? நல்ல பழக்காய்கள் விற்ற விலைக்கே அதையும் விற்றேன். நீயும் அந்த முலாம் பழத்தை அவருக்கு விற்றிருந்தால் ஒன்றும் பாராமல் அதனை வாங்கிக் கொண்டு போயிருப்பார்'' என்றான்.

‘‘கிருஷ்ணா, எனக்கு இன்று காலையில் கிடைத்த காசைப் போல இரண்டு பங்கு காசுதான் வந்தாலும், நான் ஒரு பொய் சொல்லவும் மாட்டேன், பொய்யாய் நடக்கவும் மாட்டேன், அல்லாமல், இது கடைசியிலே எனக்குத்தான் நயம், எனக்கு ஒரு வாடிக்கையாளர் அகப்பட்டார்; உனக்கொருவர் போய் விட்டார்’’ என்று முருகன் கூறினான்.

மறுநாள் அந்தப் பெரியமனிதர் தனக்கு வேண்டிய பழங்களையும் காய்கறி-களையும் முருகனிடத்திலேயே வாங்கினார்; கிருஷ்ணனுடைய கடையில் ஒன்றும் வாங்கவில்லை. இந்த விதமாகவே அந்த வருடம் கழிந்தது. முருகனிடத்தில் எப்போதும் நல்ல பொருள் வாங்கலாம் என்று கண்டு கொண்ட அவர், அவனுடைய கடைக்கே எப்போதும் போவார்; சிலவேளை அவனிடத்தில் ‘‘அடுத்த வருடம் நீ என் செய்யப் போகிறாய்’’ என்று விசாரிப்பார்.

அடுத்த வருடம் அந்தப் பெரிய மனிதருடைய பண்டகசாலையில் ஒரு நம்பிக்கையான சிறுவன் தேவைப்பட்டான். அவர், முருகனைப் பார்க்கினும் வேறொருவன் அகப்படான் என்று நினைத்து, முருகனுக்கே அந்த வேலையைக் கொடுத்தார். அவன் தன் எசமானுக்குத் தன்னிடத்தில் மேலும் மேலும் நல்ல எண்ணம் வரும்படி நடந்து, உத்தியோகத்தில் உயர்வு பெற்று கடைசியில் எசமானோடு வர்த்தகத்தில் ஒரு பங்காளி ஆயினான்.

**‘உண்மை பேசி உத்தமராக வாழ்வோம்’**

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. 'உண்மை' என்பதற்கு வேறு பெயர் தருக.
2. தரப்பட்ட கதையில், முருகனிடம் காணப்பட்ட இரண்டு நல்ல பண்புகளைத் தருக.
3. உண்மை பேசியதால் முருகனுக்குக் கிடைத்த நன்மைகள் இரண்டினை எழுதுக.
4. பொய் பேசியதால் கிருஷ்ணனுக்கு ஏற்பட்ட நட்டம் யாது?

02. கீழே கொடுக்கப்பட்ட சொற்களைக் கொண்டு, வெற்றிடங்களை நிரப்புக.

நல்ல, நம்பிக்கையான, உண்மை, பொய்

1. சமய விழுமியப் பண்புகளில் .................................. பேசுதலும் ஒன்றாகும்.
2. '.................................. சொல்வதைப் பார்க்கிலும் இது நல்லது ஐயா' என்று முருகன் சொன்னான்.
3. முருகனிடம் .................................. பொருள் வாங்கலாம் என்று பெரிய மனிதர் கண்டு கொண்டார்.
4. பெரிய மனிதருக்கு .................................. சிறுவன் தேவைப்பட்டான்.

## செயற்பாடு

1. உண்மை பேசி நன்மையை அடைந்த அரிச்சந்திரன் கதையைத் தேடி அறிக. அதன் சுருக்கத்தை வகுப்பறையில் 3 நிமிடம் உரை நிகழ்த்துக.
2. உண்மையை வலியுறுத்தும் திருக்குறள்களை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

### பாடச்சுருக்கம்

- ஆறுமுகநாவலர் எழுதிய இரண்டாம் பாலபாடத்தில் மெய்ம்மை என்னும் கதை உண்டு.
- உண்மை பேசியவருக்கு இலாபமும், பொய் பேசியவருக்கு நட்டமும் கிடைத்ததைக் கதை மூலமாக, உணர முடிந்தது.
- உண்மையே இறுதியில் வெற்றி பெறும்.
- நாமும் உண்மையைப் பேசி, நன்மையைப் பெற வேண்டும்.

### (ஆ) அன்பு செலுத்துதல்

அன்பு, நேயம் என்பன ஒரு பொருட் சொற்களாகும், நாவலர் பெருமான், அன்பு என்பதற்கு, ‘‘ஒருவருக்குத் தம்மோடு தொடர்புடையவராய், தமக்கு இனியவராய் உள்ளவரிடத்தே நிகழும் உள்ளத்தின் நெகிழ்வு அன்பு’’ என்று விளக்கம் தந்துள்ளார்.

நாம் அன்பு செலுத்த வேண்டியவர்களில் இறைவன் முதன்மையானவர். அவரை இடையறாது சிந்திக்க வேண்டும். அவரால் படைக்கப்பட்ட சகல உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும். சிபிச்சக்கரவர்த்தி என்ற அரசன் பருந்திடம் இருந்து, புறாவைக் காப்பதற்காகத் தன் உடலின் தசையை அறுத்து ஈந்தான். மனுநீதிகண்ட சோழன் பசுவுக்காக இரங்கினான். திருவள்ளுவர் அத்தகைய அன்பின் பெருமையைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> **“ அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
> **என்பும் உரியர் பிறர்க்கு.”**

அன்பில்லாதவர் பிறருக்கு உதவி செய்யமாட்டார்கள். ஆதலால், அவர்களது எல்லாப் பொருள்களும் அவர்களுக்கே உரியதாகும். ஆனால், அன்பு உடையவர் தம்மிடம் உள்ள பொருள்களால் மட்டுமன்றித் தம் உடம்பாலும் பிறருக்கே உரியவர் ஆகிறார்.

நாம் வீட்டிலுள்ள பெற்றோர், பெரியோர், சகோதரர் முதலானோர்களிடம் அன்பு செலுத்த வேண்டும். அத்தகைய அன்பு, கருணை உள்ள மாணவர்களே வீட்டிற்கும், பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் அதிக மகிழ்ச்சியைத் தருகின்றனர்.

உங்களை நேசிப்பவர்களை நீங்கள் நேசிப்பது கஷ்டமானது அல்ல. அது இயற்கையானது. ஆனால், உங்களுக்குத் தீங்கு செய்பவர்களை நீங்கள் நேசிப்பது கடினமானது. அதனைப் பின்வரும் கதை விளக்குகின்றது.

மோகன் என்ற சிறுவன் ஒரு முதலாளியிடம் வேலை செய்தான், அச்சிறுவன் மிகவும் விசுவாசம் உடையவன். அதனால், முதலாளி அச்சிறுவனுக்குப் பதவி உயர்வு வழங்கினார். ஒரு நாள் இருவரும் சந்தைக்குச் செல்லும்போது, கூன் விழுந்த ஒரு கிழவரைக் கண்டனர். அக்கிழவர் படும் துன்பத்தைக் கண்ட மோகன் தன் முதலாளியிடம், ‘‘அக்கிழவரை வீட்டிற்கு அழைத்துச் செல்வோமா?’’ என்று கேட்டான்.

அந்த முதலாளி மிகவும் நல்லவர். அவர் மோகனைச் சந்தோசப்படுத்த எண்ணினார். முதலாளி, அந்தக் கிழவரை வீட்டிற்கு அழைத்து வந்தார். வீடு சென்றதும், ‘‘அவரை வைத்து என்ன செய்வது?’’ என்று மோகனைக் கேட்டார். ‘‘அவர் என்னுடன் இருக்கட்டும் அவரால் செய்யக்கூடிய வேலைகளைக் கண்டிப்பாகச் செய்ய வைக்கிறேன்’’ என்று மோகன் பதில் அளித்தான்.

மோகன் அக்கிழவரிடம் மிகவும் அன்பாக இருந்தான், அதை மற்றவர்கள் கவனித்தார்கள். முதலாளியும் கவனித்தார். ஒருவேளை அவர் மோகனுக்கு உறவி-னராக இருப்பாரோ என்று முதலாளி நினைத்தார். ஒருநாள் கிழவர் நோய்வாய்ப்பட்டார். அப்பொழுது, மோகன்தான் அவருக்கு அருகிலிருந்து உதவி செய்து கொண்டிருந்தான்.

முதலாளி மோகனைக் கூப்பிட்டு, ''ஏன் இந்தக் கிழவருக்காக இப்படிக் கஷ்டப் படுகின்றாய்? அவர் உனக்கு உறவுக்காரரா?'' என்று வினவினார். ''இல்லை ஐயா, அவர் எனது பழைய பகைவர். அவர் என்னைச் சிறுபிராயத்திலே ஏமாற்றி, கிராமத்திலிருந்து அழைத்து வந்து நகரத்தில் விற்றுவிட்டார். அன்று அவரைப் பார்த்ததும் யார் என்று தெரிந்து கொண்டேன். அவர் எனக்குத் தீங்கிழைத்தாலும் அவர் துன்பப்படும் நேரத்தில் உதவி செய்ய விரும்பினேன். அத்துடன்.

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்
நாண நன்னயம் செய்துவிடல்''

என்னும் திருவள்ளுவர் வாக்கிற்கமைய, ஒருவர் எங்களுக்குத் தீங்கு செய்தாலும் அவருக்கு உதவ வேண்டும். மேலும், இறைவனால் படைக்கப்பட்டவரே அக்கிழ-வரும். அவர் மீது அன்பு செலுத்துவது இறைவன் மீது அன்பு செலுத்துவதற்குச் சமமாகும். இதனையே சைவ சமயமும் போதிக்கின்றது'' என்று மோகன் கூறினான்.

முதலாளி தன்னிடம் வேலை செய்பவரிடம் இருந்து நல்லதொரு பாடத்தைக் கற்றுக் கொண்டார். கல்லூரிப் படிப்பு படித்தவர்களைவிட அன்பு வழியை மோகன் நன்றாக அறிந்திருந்தது அவருக்கு ஆச்சரியத்தை அளித்தது.

நீங்கள் மோகனைப் போல் மற்றவர்களிடமும் ஏனைய உயிர்களிடமும் அன்பாக இருக்க விரும்புகின்றீர்கள் அல்லவா? அதனைச் சிறுவயதில் இருந்தே கற்றுக் கொள்வது நன்று.

'அன்பே சிவம்'

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. அன்பு என்பதற்கு வேறு பெயர் கூறுக.
2. பருந்திடமிருந்து புறாவைக் காத்த அரசன் யார்?
3. எத்தகைய பண்புள்ள மாணவர்கள் வீடு, பாடசாலை, சமுதாயம் என்பவற்றுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றனர்?
4. உங்கள் வீட்டில், நீங்கள் அன்பு செலுத்துகின்றவர்களின் பெயர்களை எழுதுக.

**02. தரப்பட்ட சொற்களை வைத்து, கீறிட்ட இடங்களை நிரப்புக.**

| என்பும், மோகன், இறைவன், பசுவுக்காக |
|---|

1. நாம் ....................................................... மீது அன்பு செலுத்த வேண்டும்.
2. அன்புடையார் ................................................................ உரியர் பிறர்க்கு.
3. மனுநீதிகண்ட சோழன் ........................................................ இரங்கினான்.
4. கிழவருக்கு ................................................................... உதவி செய்தான்.

## செயற்பாடு

1. சிபிச்சக்கரவர்த்தி, மனுநீதிகண்ட சோழன் ஆகியோரின் கதைகளை ஆசிரியரின் உதவியுடன் தேடி அறிக. அதனை வகுப்பில் சுவைபடக் கூறுக.
2. ''உயிர்களிடத்தில் அன்பு காட்டுவோம்'' என்ற தலைப்பில் வகுப்பறையில் 3 நிமிடம் உரை நிகழ்த்துக.

## பாடச்சுருக்கம்

- அன்பு என்பது நேயம் எனவும் அழைக்கப்படும்.
- நாம் ஆசிரியர், பெற்றோர், சகோதரர் மீதும், சக மாணவரிடமும் பிராணிகளிடமும் அன்பு செலுத்துவோம்.
- சிபிச்சக்கரவர்த்தி பருந்திடமிருந்து புறாவைக் காக்க, தன் உடலின் தசையை அறுத்து ஈந்தான். மனுநீதிகண்ட சோழன் பசுவுக்காக இரங்கினான்.
- நமக்குத் தீங்கு செய்பவர்களுக்கும் அன்பு காட்டவேண்டும். அதற்கு மோகன் எடுத்துக்காட்டாக உள்ளான்.

### (இ) பெரியோரைக் கனம்பண்ணுதல்

எமது சமயத்திலுள்ள விழுமியப் பண்புகளில் பெரியோரைக் கனம்பண்ணுதல் என்பது சிறந்த பண்பாகும். அவ்வாறான நற்பண்புகளை சிறுவர், சிறுமியர்களாகிய நீங்கள் இப்போதிருந்தே கடைப்பிடிக்க வேண்டும்.

பெற்றோர், குரு, வயதில் மூத்தோர் முதலானோர் ‘பெரியோர்’ என அழைக்கப்படுகின்றனர். உங்கள் வீட்டில் அப்பா, அம்மா, அக்கா, அண்ணன் ஆகியோர் அவர்களைவிட வயதில் மூத்தவர்களுக்கு மதிப்புக் கொடுத்து நடப்பதைக் கண்டிருப்பீர்கள். அதனை நீங்களும் பின்பற்றி நடக்க வேண்டும்.

உங்களிற் பலர் காலையிலும் மாலையிலும் இறைவனை வழிபட்ட பின்னர், உங்கள் பெற்றோர்களின் கால்களில் வீழ்ந்து வணங்குகின்றீர்கள். அது மட்டும் போதாது. அவர்களின் சொற்கேட்டு, கீழ்ப்பணிந்து நடக்க வேண்டும். நமது பெற்றோருக்கு நமக்கு நன்மை தரும் விடயங்கள் எவை என்பது தெரியும். அதனால், அவர்களது வார்த்தைக-ளைக் கேட்டு நடப்பது நல்ல பண்பாகும்.




சைவ சமயி ஒருவரின் கடமைகளில் பெரியோர்க-ளைக் கனம்பண்ணுதல், பெற்றோரைப் பேணல் என் பன மிக முக்கியமானவை யாகும். நீங்கள் பிறந்ததி லிருந்து, உங்களுடைய இளமைப் பருவம் வரை பெற்றோரே உங்களைப் பேணுகின்றனர். உங்களின் நலனுக்காக மிகுந்த கஷ்டப் படுகின்றனர். நீங்கள் உங்க ளுக்குத் தேவையான அனைத்திற்கும் பெற்றோர்க ளையே சார்ந்தி ருக்கின்றீர்கள்.

பெற்றோர் செய்யும் இத்தகைய உதவிகளைப் பெற்று, நீங்கள் பெரியவரா-கும் போது, அவர்கள் முதியவர்களாகி விடுகின்ற னர். அப்பொழுது, அவர்-களைப் பேணும் பொறுப்பு உங்களுக்கே உரியது. அதில் நீங்களும் பங்கெ டுக்க வேண்டும். இப்போ திருந்தே உங்களால் செய் யக் கூடிய சிறு சிறு உதவி-களை அவர்களுக்குச் செய் யுங்கள். தினமும் வீட்டைச்

சுத்தம் செய்தல், உணவு உண்ட பாத்திரத்தைக் கழுவி வைத்தல் முதலானவை அவற்றுள் சிலவாகும். அதனால், உங்கள் பெற்றோர், பெரியோர் அனைவரும் மகிழ்ச்சி அடைவார்கள்.

நாம் கனம்பண்ண வேண்டிய பெரியோரில் குரு முதன்மையானவர். குரு என்பது ஆசிரியரைக் குறிப்பதாகும். ஆசிரியரிடம் மரியாதையுடனும் பயபக்தியுடனும் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் வகுப்பறைக்குள் வரும்போது எழுந்து நின்று வணக்கம் செலுத்துதல், அவர்கள் கற்பிக்கும் விடயங்களை ஆர்வத்துடன் கற்றல், அவர் தரும் பணிகளை ஒழுங்காகச் செய்துவருதல் முதலியவற்றினூடாகக் அவர்களைக் கனம்பண்ணலாம். அவர்களை வேறு இடங்களில் காணும் போதும் வணக்கம் கூறி, மரியாதை செலுத்துதல் வேண்டும். ஆலயங்களிலுள்ள சமய குருமாருக்கும் மதிப்பளிக்க வேண்டும். அவர்கள் விபூதிப் பிரசாதம் தரும்போது கும்பிட்டு இரு கைகளாலும வாங்க வேண்டும்.



உங்களுடைய வீட்டுக்குப் பெரியோர் வருவதைக் கண்டவுடன் இருக்கையை விட்டு எழ வேண்டும். முகமலர்ந்து இனிய சொற்களைக் கூறி, அடக்கத்துடன் அவர்களை வரவேற்று, பணிவிடை செய்ய வேண்டும். அவர்கள் வீட்டைவிட்டு வெளியே செல்லும்போது, அவர்களுடன் வாயில்வரை சென்று வழியனுப்ப வேண்டும். விழாக்கள், பண்டிகைகள் நடைபெறும்போது, பெரியவர்களைத் தேடிச் சென்று, அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெறுதல் வேண்டும். பேருந்து, புகைவண்டி போன்றவற்றில் பயணம் செய்யும் போது, பெரியவர்கள், வயதானவர்கள் வந்தால், எழுந்து அவர்களுக்கு ஆசனத்தைக் கொடுத்தல் வேண்டும்.

நாம், பெரியோர்களுக்கு முன்னால் செய்யத்தகாத செயல்கள் பல உள்ளன. உயர்ந்த ஆசனத்தில் இருத்தல், காலை நீட்டிக் கொண்டிருத்தல், கால் மேல் கால் போட்டுக் கொண்டிருத்தல், எதிர்த்துப் பேசுதல், கை சுட்டிப் பேசுதல் என்பன அவற்றுட் சிலவாகும். அவற்றைத் தவிர்த்து, பெரியோரைக் கனம்பண்ணுவோம் அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெற்று நலமாக வாழ்வோம்.

''மாதா பிதா குரு தெய்வம்''

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பெரியோர் எனக் குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?
2. நீங்கள் உங்கள் வீட்டிலுள்ள பெரியோர்களுக்கு எவ்வாறான உதவிகளைச் செய்கின்றீர்கள்?
3. 'குரு' என அழைக்கப்படுபவர் யாவர்?
4. பெரியோர் முன்னால், தவிர்க்க வேண்டிய செயல்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

**02. தரப்பட்டுள்ள சொற்களை வைத்து, வெற்றிடங்களை நிரப்புக.**

| எழுந்து நின்று, கனம்பண்ணுதல், ஆசீர்வாதம், மதிப்பு, சமய குரு |
|---|

1. சமய விழுமியப் பண்புகளில் பெரியோரைக் ................................ சிறந்த பண்பாகும்.
2. வீட்டிலுள்ள பெரியவர்களுக்கு ................................ அளிக்க வேண்டும்.
3. ஆசிரியர் வகுப்பறைக்குள் வரும்போது ................................ வணக்கம் செலுத்துதல் வேண்டும்.
4. நமது ஆலயங்களிலுள்ள ............................. மதிப்பளிக்க வேண்டியவராவர்.
5. பண்டிகை நாளில் பெரியோரை வணங்கி, அவர்களுடைய ................................ பெற வேண்டும்.

## செயற்பாடு

1. உங்கள் வீட்டிற்குப் பெரியவர் ஒருவர் வருகிறார். அப்பெரியவர் உங்கள் வீட்டில் இருந்து செல்லும் வரை, அப்பெரியவரை எவ்வாறு கனம்பண்ணுவீர்கள் என்பதை எழுதுக.
2. பாடசாலையில் அதிபர், ஆசிரியர் முதலானோரை எவ்வாறு கனம்பண்ணு கிறீர்கள் என்பதைச் சுருக்கமாக எழுதுக.

### பாடச்சுருக்கம்

- நாம் பெற்றோர், குரு (ஆசிரியர்), வயதில் மூத்தோர் ஆகியோரைக் கனம்பண்ணுதல் வேண்டும்.
- வீட்டிலும், பாடசாலையிலும், கோயிலிலும், பயணம் செய்யும்போதும் பெரி-யோரைக் கனம்பண்ணச் சந்தர்ப்பங்கள் உள்ளன.
- வீட்டிற்கு வரும் பெரியவர்களுக்குச் செய்யக்கூடிய பல நல்ல செயல்கள் உள்ளன.
- பெரியோர்களின் ஆசீர்வாதம் நமக்கு நன்மை தரும்.
- பெரியோர் முன் செய்யத்தகாத செயல்கள் பல உள்ளன. அவற்றை நாம் தவிர்த்தல் வேண்டும்.

**(ஈ) பகிர்ந்துண்ணல்**

நமது சமூகத்தில் உள்ளவர்களிடம் வளர்க்கப்பட வேண்டிய சமய விழுமியப் பண்புகளில் பகிர்ந்துண்ணலும் ஒன்றாகும். அதனையே, எமது முன்னோர்கள் அறம், தர்மம் என்னும் பெயர்களால் வழங்கினர்.

ஔவையார், 'அறம் செய விரும்பு', 'ஐயமிட்டுண்' என ஆத்திசூடியில் அழகாகக் குறிப்பிட்டுள்ளார். திருமூலர், பசியென்று வந்த எவருக்கும் நாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி உணவைக் கொடுத்து, பகிர்ந்துண்ணுதல் எல்லோராலும் செய்யக்கூடிய அறம் என்கிறார். இதனைப் பின்வரும் திருமந்திரப் பாடலில்

'யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.' எனக் குறிப்பிட்டுள்ளார்.

திருவள்ளுவரும் மக்கள் செய்ய வேண்டிய அறங்களில் பகிர்ந்துண்ணலை

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.' எனக் குறிப்பிட்டுள்ளார்.

அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாக விளங்குவது, தமக்குக் கிடைத்த உணவை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து, தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுவதாகும். மேலும்,

'செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.'

என்று திருவள்ளுவர் இல்வாழ்வானின் கடமையையும் குறிப்பிடுகின்றார். அதாவது, தன்னிடத்து வந்த விருந்தாளிக்கு உணவளித்து உபசரித்து, அதன்பின் வரக்கூடிய விருந்தாளியை உடனிருந்து உண்பதற்கு எதிர்பார்க்கும் இல்லறத்தான், மறுபிறப்பில் தேவனாகித் தேவர்களுக்குச் சிறந்த விருந்தினனாகப் போற்றப்படுவான் என்பதாகும்.



திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருவீழிமிழலையில் பஞ்சம் ஏறப்பட்டபோது, இறைவனின் துணையோடு உணவு கொடுத்து பஞ்சத்தை நீக்கினார்கள். நாமும் தைப்பொங்கல், சித்திரைப் புத்தாண்டு என்பவற்றைக் கொண்டாடும் போது, நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அயலவர்களுக்கும் பொங்கல் மற்றும் உணவுப் பொருட்களைப் பகிர்ந்தளிக்கின்றோம் அல்லவா? அதனை நாம் முடிந்தவரையில் கடைப்பிடிக்க வேண்டும். வீட்டிலும் பாடசாலையிலும் இப்பண்புகளை வளர்த்தல் அவசியமாகும்.

## பயிற்சிகள்

**01. பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**

1. 'அறம் செய விரும்பு' என்பதை வலியுறுத்தும் நூல்.

   (அ) ஆத்திசூடி (ஆ) கொன்றைவேந்தன் (இ) மூதுரை

2. திருமந்திரம் என்னும் நூலின் ஆசிரியர்

   (அ) திருவள்ளுவர் (ஆ) ஔவையார் (இ) திருமூலர்

3. பகிர்ந்துண்ணலுடன் தொடர்புடைய பண்டிகை ஒன்று.

   (அ) சிவராத்திரி (ஆ) சித்திரை வருடப்பிறப்பு (இ) மாசிமகம்

4. எல்லோராலும் இலகுவாகச் செய்யக்கூடிய அறச்செயல்

   (அ) உண்ணும்போது ஒரு கைப்பிடி உணவை வழங்கல்

   (ஆ) பணம் வழங்கல் (இ) உடை வழங்கல்

## செயற்பாடு

1. நீங்கள் வகுப்பறையில் அல்லது வீட்டில் உணவைப் பகிர்ந்துண்ட சந்தர்ப்பம் ஒன்றினை வகுப்பறையில் விளக்கிக் கூறுக.

### பாடச்சுருக்கம்

- இன்றைய சமூகத்தில் வளர்க்கப்பட வேண்டிய பண்புகளில் பகிர்ந்துண்ணலும் ஒன்றாகும்.
- நமது முன்னோர் பகிர்ந்துண்ணலின் அவசியம் பற்றி நூல்களில் கூறியுள்ளனர்.
- சைவ ஆலயங்கள் தோறும் பகிர்ந்துண்ணல் பண்பு வளர்க்கப்படுகின்றது.

### (உ) தன்னம்பிக்கையை வளர்த்தல்

நாம் இறை நம்பிக்கை, சமய நம்பிக்கை பற்றி அறிந்திருக்கின்றோம். ஆனால் ஒவ்வொருவரும் தம்முள் கட்டியெழுப்ப வேண்டிய தன்னம்பிக்கை பற்றி அறிய வேண்டியது அவசியமாகும். தன்னம்பிக்கை என்றால் ஒருவருக்குத் தன் மீது ஏற்படும் நம்பிக்கையாகும்.

தன்னம்பிக்கையை வளர்க்கும் வழி உங்களிடமே உண்டு. அதற்கு முதலில் தேவை நம்பிக்கையாகும். என்னால் இதைச் செய்ய முடியும், அதற்கு இறைவன் துணை நிற்பான் என்று நம்புங்கள், அதனுடன், முயற்சியையும் சேர்த்துக் கொள்ளுங்கள். திட்டமிட்டு நேரத்தை ஒதுக்குங்கள், இப்போது பயிற்சியில் ஈடுபடுங்கள். உங்களுடைய பாட நூலுக்கமைவாகப் படியுங்கள். அதிலுள்ள செயற்பாடுகள், பயிற்சிகளைச் செய்யுங்கள், குறிப்பிட்ட பாடத்தைப் படிப்பதற்கு முன், உங்களுக்கு அது சிரமமாக இருந்தது. ஆனால், படித்துப் பயிற்சிகளைச் செய்தது யார்? நிச்சயம் நீங்களே. இப்போது உங்களுக்கு உங்கள் மீது ஒரு பற்று, உறுதி, நம்பிக்கை ஏற்பட்டிருக்கும். அதனை மேலும், மேலும் பயிற்சியில் கொண்டுவர வேண்டும். அப்போது உங்களின் வெற்றியைத் தடுக்க யாராலும் முடியாது.

தன்னம்பிக்கையும் முயற்சியும் என்றுமே தோல்வி அடைவதில்லை. 'நம்பினோர்க்கு இயற்கை நலமே செய்யும்', 'முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்' 'முயற்சி திருவினை யாக்கும்' என்னும் முதுமொழிகள், முயற்சியின் சிறப்பை வலியுறுத்துகின்றன.

'முடியாது' என்பது உங்களின் வார்த்தையில் இருக்கவே கூடாது. முடியும்; அதனை என்னால் செய்ய முடியும் போன்ற வாக்கியங்களை உங்களது வேதவாக்காகக் கொள்ளுங்கள். உங்களால் உண்மை பேச முடியும். பெரியோர்களைக் கனம்பண்ண முடியும்; ஆசிரியருக்குக் கீழ்ப்படிவுள்ளவர்களாக, நற்பண்புள்ள மாணவர்களாகத் திகழ முடியும். மற்றவர்களுடன் உணவைப் பகிர்ந்துண்டு, ஒற்றுமையை வளர்க்க முடியும். இவ்வாறு சிந்தித்துக் கொண்டே போனால், உங்களால் முடியாதது ஒன்றுமே இல்லை என்ற நிலைக்கு வருவீர்கள். காந்தியின் தன்னம்பிக்கைதான் அவரை, 'மகாத்மா' ஆக்கியது. அரிச்சந்திரனின் தன்னம்பிக்கைதான் அவரை உண்மையின் மறுவடிவமாக்கியது.

எவராக நீங்கள் வர விரும்புகின்றீர்களோ, நிச்சயம் நீங்கள் அவராக வருவீர்கள். ஆனால், தன்னம்பிக்கையுடன் முயன்று, முன் சொன்ன பயிற்சி முதலானவற்றையும் சேர்த்தால் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள். இன்று உயர் நிலையில் இருப்பவர்களைப் பாருங்கள். அவர்கள் தன்னம்பிக்கையாலே உயர்ந்தவர்கள். அவர்கள், ''நம்பிக்கை என்ற சொல்லின் முன்னால் கஷ்டங்கள் எல்லாம் சரிந்துவிடும்'' என்ற கூற்றினை ஏற்று, முயற்சி செய்து வெற்றி கண்டவர்கள், அவர்களின் வழியைப் பின்பற்றி, தன்னம்பிக்கையுடன் வாழ்வில் வெற்றி பெறுவோம். வெற்றிக்கு எல்லை இல்லை.

## வெற்றி

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி
எங்கும் வெற்றி எதனிலும் வெற்றி
கண்ணு மாருயி ருமென நின்றாள்
காளித் தாயிங் கெனக்கருள் செய்தாள்
மண்ணுங் காற்றும் புனலு மனலும்
வானும் வந்து வணங்கி நில்லாவோ?
விண்ணு ளோர்பணிந் தேவல்செய் யாரோ
வெல்க காளி பதங்களென் பார்க்கே ? (சுப்பிரமணிய பாரதியார்)

தன்னம்பிக்கை தொடர்பாக சுவாமி விவேகானந்தர்

'நான் என் மூதாதையரின் காரணமாகவே பெருமை கொள்கிறேன். பழமையைப் படிக்கப் படிக்க, இந்தப் பெருமை இன்னும் அதிகரிக்கிறது. அது எனக்கு வலிமையையும், வீர நம்பிக்கையையும் தருகிறது. இறைவன் அருளால், அதே பெருமிதம் உங்களுக்கும் உண்டாகட்டும். உங்களது முன்னோர்களிடம் இருந்த நம்பிக்கை உங்கள் உதிரத்தில் கலக்கட்டும். அது உங்கள் வாழ்க்கையோடு பிரிக்க முடியாத பகுதியாக விளங்கட்டும் அது உலகை உய்விக்கத் தொண்டு புரியும்படி உங்களைத் தூண்டட்டும்.' என குறிப்பிட்டுள்ளார்.

'நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத்தீர்ப்பு'

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. நீங்கள் உங்களது தன்னம்பிக்கையை எவ்வாறு வளர்த்துக் கொண்டீர்கள் என்பதை எழுதுக.
2. தன்னம்பிக்கையால் உலகை வென்ற மகான்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
3. நீங்கள் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு, வெற்றியடைந்த சம்பவத்தைச் சுருக்கமாக எழுதுக.

## செயற்பாடு

1. தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் - என்னும் தலைப்பில் ஐந்து நிமிடம் உரை நிகழ்த்திக் காட்டுக.
2. தன்னம்பிக்கையால் உயர்ந்தோர் விபரங்களைச் சேகரித்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## பாடச்சுருக்கம்

- ஒருவருக்கு தன்மீது ஏற்படும் நம்பிக்கை தன்னம்பிக்கை எனப்படும்
- தன்னம்பிக்கையால் உயர்ந்தவர்களில் சுவாமி விவேகானந்தர், அரிச்சந்திரன் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.
- நாமும் தன்னம்பிக்கை உள்ளவர்களாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.